**டிசம்பர் – 14**

# TNPSC துளிகள்

❖ சவுதி அரேபியாவின் ஜெட்டாவில் நடைபெற்ற ரெட் சீ சர்வதேச திரைப்பட விழாவில் ஆலியா பட் கோல்டன் குளோப்ஸ் ஹாரிசன் விருதைப் பெற்றார்.

❖ இலக்கியம், கவிதை, இந்திய மொழிகள் மற்றும் படைப்பாக்கம் சார்ந்த தொடர்பு மூலம் அறிவியலை ஊக்குவிப்பதற்காக புது டெல்லியில் விக்யானிகா அறிவியல் இலக்கிய விழா 2025 நடைபெற்றது.

❖ மிகவும் மதிப்புமிக்க சமகால கலை விருதுகளில் ஒன்றான 2025 ஆம் ஆண்டு டர்னர் பரிசினை வென்று, இந்த பரிசை வென்ற முதல் கற்றல் குறைபாடுள்ள கலைஞர் என்ற பெருமையை னெனா கலு பெற்றுள்ளார்.

❖ தி பேங்கர்ஸ் இதழின் 2025 ஆம் ஆண்டின் சிறந்த வங்கியாளர் விருதுகள் விழாவில் 'இந்தியாவின் சிறந்த வங்கி' ஆக பாங்க் ஆஃப் பரோடா அங்கீகரிக்கப்பட்டது.

❖ இந்திய இரயில்வே நிர்வாகமானது, அகலப்பாதைகளில் இயங்குகின்ற, நீராவியை மட்டுமே வெளியிடுகின்ற, சுழிய அளவிலான கார்பன் உமிழ்வை உருவாக்குகின்ற இந்தியாவின் முதல் ஹைட்ரஜன் எரிபொருளில் இயங்கும் இரயிலை ஒரு சோதனைத் திட்டமாக தொடங்க உள்ளது.

❖ EB-5 நுழைவு இசைவுச் சீட்டிற்குப் பதிலாக சட்டப்பூர்வ அந்தஸ்து மற்றும் குடியுரிமைக்கான வாய்ப்பினை வழங்கும் "தங்க அட்டை" திட்டத்தை அமெரிக்கா தொடங்கியுள்ளது.

  ○ இதில் தனிநபர் விண்ணப்பதாரர்கள் 1 மில்லியன் டாலர் செலுத்தி இதற்கு விண்ணப்பிக்கலாம் அதே நேரத்தில் நிறுவனங்கள் வெளிநாட்டில் பிறந்த ஓர் ஊழியருக்கு 2 மில்லியன் டாலர் செலுத்துகின்றன.

❖ இந்தியா, கடல்சார் போக்குவரத்திற்கான பல்வேறு உதவிகளுக்கான சர்வதேச அமைப்பிற்கான (IALA) 3வது சபை அமர்வை மும்பையில் நடத்தியது.

  ○ 75 கலங்கரை விளக்கத் தளங்களில் சுற்றுலாவிற்காக என ஒரு டிஜிட்டல் அனுமதிச் சீட்டு வலை தளம் தொடங்கப்பட்டது என்பதோடு இந்த கலங்கரை விளக்கங்கள் அனைத்தும் தற்போது முழுமையாக சூரிய சக்தியில் இயங்கும் என்ற நிலையில் இது எளிதான இயங்கலை அணுகல் மற்றும் தூய்மையான, நீடித்த நிலையான சுற்றுலாவை ஆதரிக்கின்றன.

❖ கூகுள் மற்றும் தெலுங்கானா மாநில அரசாங்கம் ஐதராபாத்தில் உள்ள தொழில்நுட்ப மையத்தில் (T-Hub) புத்தொழில் நிறுவனங்களுக்கான கூகுள் மையத்தினை தொடங்கி உள்ளன.

  ○ தேர்ந்தெடுக்கப்பட்ட செயற்கை நுண்ணறிவு சார் புத்தொழில் நிறுவனங்களுக்கு ஓராண்டிற்கு இலவச இணை வேலை இடத்தினை இந்த மையம் வழங்குகிறது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## பனை விதைகள் விதைப்பு

❖ பசுமை தமிழ்நாடு திட்டத்தின் கீழ், தமிழ்நாடு முழுவதும் 2.24 கோடிக்கும் அதிகமான (22.4 மில்லியன்) பனை விதைகள் நடப்பட்டுள்ளன.


❖ பனை (போராசஸ் ஃபிளாபெல்லிஃபர்) என்பது தமிழ்நாடு, இலங்கை மற்றும் தென் கிழக்கு ஆசியாவில் பொதுவாகக் காணப்படும் வறட்சியைத் தாங்கும் மரமாகும்.

- பசுமைப் பரவல் மற்றும் சுற்றுச்சூழல் மீளுருவாக்கத்தினை அதிகரிப்பதற்கான மாநில அளவிலான சுற்றுச்சூழல் முயற்சியின் ஒரு பகுதியாக இந்த விதைப்பு இயக்கம் உள்ளது.
- நடப்பட்ட அனைத்து விதைகளும் புவியிடத் தகவல்கள் குறிக்கப் பட்டு கண்காணிப்பு நோக்கங்களுக்காக கைபேசி செயலி மூலம் கண்காணிக்கப்படுகின்றன.
- மண் வளங்காப்பு, நீர் தக்கவைப்பு மற்றும் நிலையான கிராமப்புற வாழ்வாதாரங்களை ஆதரிப்பதை இந்த முன்னெடுப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது.




# தேசியச் செய்திகள்

## இந்தியாவின் புதிய எரிபொருள் கலப்பு எரிப்புக் கொள்கை




- நிலக்கரி அடிப்படையிலான அனல் மின் நிலையங்களில் (TPPs) உயிரி பொருட்களின்

துகள்கள் மற்றும் நகராட்சி திடக்கழிவு (MSW) அடிப்படையிலான எரிக்கப்பட்ட கரியை இணைந்து எரிப்பதை கட்டாயமாக்கும் புதிய கொள்கையை மத்திய மின்சாரத் துறை அமைச்சகம் வெளியிட்டது.

- உமிழ்வைக் குறைப்பதற்கும் தூய்மை இந்தியா திட்டத்தை ஆதரிப்பதற்கும் உபரி வேளாண் எச்சங்கள் மற்றும் முறையாக கையாளப்படாத MSW கழிவினைப் பயன்படுத்துவதை இந்தக் கொள்கை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- டெல்லியின் தேசியத் தலைநகரப் பகுதியில் உள்ள TPP நிலையங்கள் 2025–26 ஆம் ஆண்டு முதல் 5% உயிரிப் பொருட்களின் துகள்கள் மற்றும் 2% MSW கரியைக் கலந்து எரிக்க வேண்டும், அதே நேரத்தில் மற்ற ஆலைகள் 5% உயிரிப் பொருட்களின் துகள்கள் அல்லது MSW கரியை இணைந்து எரிக்க வேண்டும்.
- இந்தக் கொள்கை, எரிசக்தி கட்டண விகிதத்தின் கீழ் கூடுதல் எரிபொருள் செலவுகளை கட்டணமாகச் செலுத்த அனுமதிக்கிறது மற்றும் ஒவ்வொரு நிகழ்விற்குமான விலக்குகளை வழங்குகிறது.

## தானியச் சேமிப்பு சீர்திருத்தங்கள்




- முதன்மை வேளாண் கடன் சங்கங்களில் (PACS) அதிக உணவு தானியச் சேமிப்பை உருவாக்குவதற்காக அரசாங்கம் ஆனது 2023 ஆம் ஆண்டில் உலகின் மிகப்பெரிய தானியச் சேமிப்புத் திட்டத்தைத் தொடங்கியது.
- வேளாண் உள்கட்டமைப்பு நிதி (AIF), வேளாண் சந்தைப்படுத்தல் உள்கட்டமைப்புத் திட்டம் (AMI), வேளாண் இயந்திரமயமாக்கலுக்கான துணைத் திட்டம் (SMAM), மற்றும் சிறிய உணவு பதப்படுத்தும் நிறுவனங்களின் பிரதான் மந்திரி முறைப்படுத்தல் (PMFME) போன்ற திட்டங்களைப் பயன்படுத்தி இந்தத் திட்டம் கிடங்குகள் மற்றும் பிற வசதிகளை உருவாக்குகிறது.
- AIF திருப்பிச் செலுத்துதல் 2+8 ஆண்டுகளாக நீட்டிக்கப்பட்டதாலும், AMI கட்டுமானச் செலவு மெட்ரிக் டன்னிற்கு 7,000 ரூபாய் (சமவெளி) மற்றும் மெட்ரிக் டன்னிற்கு 8,000 ரூபாய் (வடகிழக்கு) ஆகவும் உயர்த்தப்பட்டதாலும் கடன் விதிகள் எளிதாக்கப்பட்டன.

- PACS தற்போது 33.33% மானியத்தைப் பெறுகிறது என்ற நிலையில் மேலும் சாலைகள், எடைப் பாலங்கள் மற்றும் பிற ஆதரவுப் பணிகளுக்கு கூடுதல் உதவியைப் பெறுகிறது.
- இந்திய உணவுக் கழகம் (FCI) ஆனது 2,500 மெட்ரிக் டன் மற்றும் அதற்கு மேற்பட்ட அளவிலான கிடங்குகளுக்கு 9 ஆண்டு கால பணியமர்த்தல் உத்தரவாதத்தை வழங்கச் செய்கிறது.
- சுமார் 704 தளங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு 59,702 மெட்ரிக் டன் சேமிப்பு ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ளதுடன், இந்தத் திட்டத்தில் தற்போது அனைத்து கூட்டுறவுக் குழுக்களும் அடங்கும்.

## சுஜாலாம் பாரத் செயலி




- ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் கிராமப்புறக் குடிநீர் விநியோக அமைப்புகளை நிர்வகிப்பதற்காக ஜல் சக்தி அமைச்சகம் சுஜாலாம் பாரத் செயலியை அறிமுகப் படுத்தியது.
- இந்தச் செயலி ஒவ்வொரு கிராமப்புற நீர் திட்டத்திற்கும் சுஜல் காவ்ன் ID என்ற டிஜிட்டல் அடையாளத்தை உருவாக்குகிறது.
- இது பாஸ்கராச்சார்யா தேசிய விண்வெளிப் பயன்பாடுகள் மற்றும் புவி சார் தகவல் நிறுவனத்தின் (BISAG-N) ஆதரவுடன் உருவாக்கப்பட்டது.
- இந்தச் செயலியானது நீர்சார் வலையமைப்புகள் மற்றும் அமைப்புகளை வரைபடமாக்குவதற்காக PM கதி சக்தி புவியியல் தகவல் அமைப்பு (GIS) உடன் இணைக்கப் பட்டுள்ளது.
- இது நீரின் தரம், உள்கட்டமைப்பு மற்றும் சமூக கருத்துக்களை நிகழ்நேரத்தில் கண்காணிக்க உதவுகிறது.

## செயற்கை நுண்ணறிவு பதிப்புரிமைக் கொள்கை

- தொழில் துறை மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை (DPIIT) ஆனது, ஆக்கப் பூர்வமான செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் பதிப்புரிமைச் சட்டம் ஆகியவற்றுக்கு இடையேயான இடைமுகம் குறித்த அதன் பணி ஆய்வறிக்கையின் முதல் பகுதியை வெளியிட்டது.
- தற்போதைய பதிப்புரிமைச் சட்டம் ஆனது செயற்கை நுண்ணறிவு தொடர்பான சவால்களுக்கு போதுமானதா என்பதை மதிப்பிடுவதற்கு எட்டு பேர் கொண்ட குழுவின் பரிந்துரைகளை இந்த ஆய்வறிக்கை முன்வைக்கிறது.

- இது உலகளாவிய அணுகுமுறைகளான முழுமையான விலக்குகள், உரை மற்றும் தரவு செயலாக்க விதிவிலக்குகள், தன்னார்வ உரிமம் மற்றும் நீட்டிக்கப்பட்ட கூட்டு உரிமம் போன்றவற்றை மதிப்பாய்வு செய்கிறது.
- "ஒரு தேசம், ஓர் உரிமம், ஒரு கட்டணம்" எனப்படும் இயங்கலை உள்ளடக்கத்திற்கான செயற்கை நுண்ணறிவு அணுகலுக்கான ஒரு உரிமைத் தொகை மாதிரியை இந்த ஆய்வறிக்கை முன்மொழிகிறது.
- இந்த மாதிரியின் கீழ், AI உருவாக்க வல்லுநர்கள் சட்டப்பூர்வமாக அணுகப்பட்ட அனைத்து உள்ளடக்கங்களிலும் பயிற்சி பெற ஒரு முழுமையான உரிமத்தைப் பெறுகிறார்கள் அதே நேரத்தில் வணிகமயமாக்கலுக்குப் பிறகுதான் உரிமைத் தொகைகள் செலுத்தப் படுகின்றன.
- உரிமைத் தொகை விகிதங்கள் ஆனது சேகரிப்பு மற்றும் விநியோகத்தை நிர்வகிக்கும் ஒரு மைய வழிமுறையுடன், அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட குழுவால் நிர்ணயிக்கப் படும்.





## சர்வதேசச் செய்திகள்

### இஸ்ரேல்–காசா மஞ்சள் கோடு

- இஸ்ரேலின் இராணுவத் தலைவர் மஞ்சள் கோட்டை காசாவிற்குள் ஒரு "புதிய எல்லை" என்று விவரித்தார்.
- மஞ்சள் கோடு தற்போது இஸ்ரேலியப் படைகளால் கைப்பற்றப்பட்ட பகுதிகளைக் குறிக்கிறது என்பதோடு இது முன்னேறும் தற்காப்புக் கோட்டாகச் செயல்படுகிறது.
- இஸ்ரேல் தற்போது முக்கிய வேளாண் பகுதிகள் மற்றும் எகிப்து எல்லைக் கடப்புப் பகுதி ஆகியவை உள்ளிட்ட காசாவின் பாதி அளவிலான பகுதிகளைக்

கட்டுப்படுத்துகிறது.

- ❖ மஞ்சள் கோட்டை நிறுவுவது என்பது, விரிவான இஸ்ரேலிய படையின் பின் வாங்கலை அவசியமாக்குகின்ற அமெரிக்காவின் 20 அம்ச போர்நிறுத்தத் திட்டத்தின் 2ம் கட்டத்துடன் முரண்படுகிறது.
- ❖ இஸ்ரேல் நாடானது, ஹமாஸ் போர் நிறுத்த மீறல்களைச் செய்ததாகவும் குற்றம் சாட்டும் அதே நேரத்தில் மஞ்சள் கோட்டை அரசாங்கக் கொள்கையாக அதிகாரப் பூர்வமாக அறிவிக்கவில்லை.




## சர்வதேசகே காவல் துறையின் நீல அறிக்கை




- ❖ கோவா இரவு விடுதி தீ விபத்து சம்பவத்துடன் தொடர்புடைய சௌரப் மற்றும் கௌரவ் லுத்ராவைக் கண்டுபிடிக்க சர்வதேச காவல் துறை (இன்டர்போல்) ஒரு நீல அறிக்கையை வெளியிட்டுள்ளது.

- ஒரு நீல அறிக்கை என்பது சந்தேகத்திற்குறிய ஒரு நபரின் அடையாளம், இருப்பிடம் அல்லது செயல்பாடுகள் குறித்த தகவல்களைச் சேகரிக்கிறது என்பதோடு மேலும் இது கைது ஆணை அல்ல.
- சந்தேகத்திற்குறிய நபர்களைக் கண்டறிய பயணப் பதிவுகள் மற்றும் எல்லைக் கடப்பு இடங்கள் குறித்த தகவல்களைப் பெற அதிகாரிகளுக்கு இந்த அறிக்கை உதவுகிறது.
- 196 உறுப்பினர் நாடுகளில் உலகளாவிய காவல் துறை ஒத்துழைப்பை ஆதரிக்க இன்டர்போல் வண்ணக் குறியீடு அறிக்கைகளைப் பயன்படுத்துகிறது.

# பொருளாதாரச் செய்திகள்

### ParRVA அமைப்பு




- இந்தியப் பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை வாரியம் (SEBI) ஆனது, கடந்தகால இடர் மற்றும் வருவாய் சரிபார்ப்பு நிறுவனம் (ParRVA) என்ற புதிய நிறுவனத்தைத் தொடங்கி உள்ளது.
- இடர் மற்றும் வருவாய் தரவைச் சரிபார்ப்பதன் மூலம் முதலீட்டுத் தயாரிப்புகளின் முறையற்ற விற்பனையை நிறுத்துவதை PaRRVA நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மேற்பார்வையை மேம்படுத்த இந்த அமைப்பு டிஜிட்டல் தணிக்கை சோதனைகள் மற்றும் தரப்படுத்தப்பட்ட அறிக்கையிடலைப் பயன்படுத்துகிறது.
- நிதிச் சேவைகளின் சரிபார்க்கப்பட்ட செயல்திறன் பதிவுகளுக்கான அணுகலை முதலீட்டாளர்களுக்கு ParRVA வழங்கும் என்று SEBI கூறியது.
- அங்கீகரிக்கப்படாத ஆலோசனைகளை வழங்கும் பதிவு செய்யப்படாத நிதித் தகவல் வழங்குநர்களுக்கு எதிரான நடவடிக்கையையும் தற்போது ஒழுங்குமுறை ஆணையம் அதிகரித்து வருகிறது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

### 3I/ATLAS கிரகப் பாதுகாப்புப் பயிற்சி

- 3I/ATLAS எனப்படும் புவிக்கு அருகிலுள்ள அமைப்பைக் கண்காணிப்பதை மையமாகக் கொண்டு, ஐரோப்பா உலகின் மிகப்பெரிய கிரகப் பாதுகாப்புப் பயிற்சியை

நடத்தியது.


- இந்தப் பயிற்சியை ஐரோப்பிய விண்வெளி முகமை (ESA), நாசா மற்றும் ஐக்கிய நாடுகளின் சர்வதேச குறுங்கோள் எச்சரிக்கை வலையமைப்பு (UN-IAWN) ஆகியவை இணைந்து வழிநடத்தின.
- இந்தப் பயிற்சி, குறுங்கோள்களின் அச்சுறுத்தல்களுக்கான முன்கூட்டிய எச்சரிக்கை அமைப்புகள், கண்காணிப்பு வலையமைப்புகள், அவசர ஒருங்கிணைப்பு மற்றும் பொதுத் தொடர்பு ஆகியவற்றைச் சோதித்தது.
- நிலப்பரப்பில் உள்ள தொலைநோக்கிகள் மற்றும் விண்வெளி அடிப்படையிலான உணர்வுக் கருவிகள் ஆனது அதன் சுற்றுப்பாதைப் பாதையை முறைப்படுத்த 3I/ATLAS தோராயமாக வினாடிக்கு 60 கிலோ மீட்டர் வேகத்தில் பயணிப்பதைக் கண்காணித்தன.
- இதன் மாதிரியாக்கத்தில் பாதைப் பகுப்பாய்வு, மோதல்களுக்கான நிகழ்தகவு கணக்கீடுகள், விலக்கல் நடவடிக்கைகள் மற்றும் பொது மக்கள் பாதுகாப்பு நடவடிக்கைகள் ஆகியவை அடங்கும்.




## இந்தியாவின் அணு சக்தியில் இயங்கும் கடற்படை

- இந்தியா உலகின் 6வது பெரிய அணு உலை தொகுப்பினை இயக்குகிறது.
- 2024–25 ஆம் ஆண்டில் மொத்த மின்சார உற்பத்தியில் அணுசக்தி சுமார் 3.1% பங்களிக்கிறது.
- தற்போதைய நிறுவப்பட்ட அணுசக்தி திறன் 8.78 GW ஆகும்.
- உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட நுட்பம் சார்ந்த அழுத்தப்பட்ட கன நீர் உலை (PHWR) தொழில்நுட்பம் தற்போது 700 மெகாவாட் உலைகளை ஆதரிக்கிறது.

- புதிய 700 மெகாவாட் மற்றும் 1000 மெகாவாட் அணு உலைகளுடன், 2031–32 ஆம் ஆண்டிற்குள் அவற்றின் திறன் 22.38 ஜிகாவாட்டாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- 2047 ஆம் ஆண்டிற்குள் 100 ஜிகாவாட் அளவிலான உற்பத்தித் திறனை அடைவதற்கான அணுசக்தி திட்டத்தை அரசாங்கம் அறிவித்துள்ளது.




## சுற்றுச்சூழல் செய்திகள்


### சிறுவாணி மலைகளில் புதிய கேடய வால் பாம்பு இனங்கள்




- சிறுவாணி மலைகளில் உள்ள குடிமக்கள் அறிவியலாளர்கள் உதவியுடன் ரைனோஃபிஸ் சிறுவானியென்சிஸ் என்ற புதிய கேடய வால் பாம்புகள் இனம் கண்டறியப் பட்டுள்ளது.

- கேடய வால் பாம்புகள் யூரோபெல்டிடே குடும்பத்தைச் சேர்ந்த சிறிய, விஷமற்ற, மண்ணில் துளையிடும் பாம்புகள் ஆகும் என்பதோடு இவை யூரோபெல்டிட்ஸ் என்றும் அழைக்கப் படுகின்றன.
- அவற்றின் வட்டு வடிவ வால் முனை காரணமாக அவை "கேடய வால் பாம்புகள்" என்று பெயரிடப்பட்டுள்ளன.
- இந்தப் பாம்புகள் முக்கியமாக மேற்குத் தொடர்ச்சி மலைகள் மற்றும் தீபகற்ப இந்தியாவின் சில பகுதிகளில் காணப்படுவதுடன், இந்தியா மற்றும் இலங்கையில் மட்டுமே காணப்படுகின்றன.

## குமாவோன் இமயமலையில் புலிகள் நடமாட்டம்




- இமயமலையில் கிட்டத்தட்ட 10,000 அடி உயரத்தில் ஒரு வங்காளப் புலி காணப்பட்டது.
- உத்தரகண்டின் சுந்தர்துங்கா பனிப்பாறை பள்ளத்தாக்கில் இந்தப் பார்வை நிகழ்ந்தது.
- இந்தத் தொலைதூர ஆல்பைன் நிலப்பரப்பில் கேமரா பொறிகள் பெரிய பூனையைப் படம் பிடித்தன.
- இது இந்த இனத்திற்கான மிக உயர்ந்த உறுதிப்படுத்தப்பட்ட உயரங்களில் ஒன்றாகும்.
- வங்காளப் புலிகள் பொதுவாக 6,000 அடி உயரத்திற்குக் கீழே காணப்படுகின்றன.
- சமீபத்தியப் பார்வைகள் அவை இப்போது உயர்ந்த இமயமலைப் பகுதிகளை ஆராயக் கூடும் என்று கூறுகின்றன.
- மான் மற்றும் செரோ போன்ற இரை இனங்கள் இந்த உயரத்தில் உள்ளன.
- இது புலிகள் அந்த உயரத்தில் உயிர் வாழ அனுமதிக்கும் உணவுத் தளத்தை வழங்குகிறது.
- பெரிய பூனைகள் ஆல்பைன் மண்டலங்களுக்குச் செல்வதற்கான சில ஆதாரங்களை இந்தப் படங்கள் அறிவியலாளர்களுக்கு வழங்குகின்றன.
- புலிகள் குளிர்ந்த காலநிலையில் உயிர் வாழவும் நகரவும் முடியும் என்பதை இது உறுதிப்படுத்துகிறது.
- காலநிலை மாற்றம் புலிகளைகே குளிர்ந்த மண்டலங்களுக்குத் தள்ளக் கூடும் என்று

நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

- ❖ சிறியதான வாழ்விடங்களில் காடு இழப்பு மற்றும் மனித அழுத்தம் முக்கியமானது.
- ❖ இள வயது புலிகளால் பரவுவது அதிக உயர இருப்புக்கும் வழி வகுக்கும்.

# மாநிலச் செய்திகள்

## பூமி சுதார் சாம்வாத்




- ❖ நிலப்பிரச்சனைகளை விரைவாக தீர்ப்பதற்காக பீகார் மாநில அரசானது, 'பூமி சுதார் சாம்வாத்' திட்டத்தைத் தொடங்க உள்ளது.
- ❖ மக்கள் தங்கள் நில ஆவணங்களை உடனடி உதவிக்காக முதலில் பாட்னாவிலும் பின்னர் லக்கிசராய்விலும் காட்டலாம்.
- ❖ 'உதான் தஸ்தா' என்ற சிறப்புக் குழு நிலம் தொடர்பான மோசடிகளைச் சரிபார்த்து அவற்றை நிறுத்தும்.
- ❖ சட்டவிரோத ஆக்கிரமிப்புக்கு எதிரான நடவடிக்கையுடன் ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கான பிரச்சாரம் மார்ச் மாதத்தில் தொடங்கும்.
- ❖ இந்தத் திட்டமானது நில நிர்வாகத்தை மேம்படுத்துவதையும், பொதுமக்களுக்கு இந்த அமைப்பை மிகவும் வெளிப்படையானதாக மாற்றுவதையும் நோக்கமாகக் கொண்டு உள்ளது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## தேசிய கைவினை விருதுகள் 2023–24

- ❖ 2025 ஆம் ஆண்டு டிசம்பர் 09 ஆம் தேதியன்று புது டெல்லியில் உள்ள விஞ்ஞான் பவனில் ஷில்ப் குரு மற்றும் தேசிய கைவினை விருதுகளைகே குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு வழங்கினார்.
- ❖ டிசம்பர் 08 முதல் 14 ஆம் தேதி வரை நடைபெற்ற 2025 ஆம் ஆண்டு தேசிய கைவினை வார கொண்டாட்டத்தின் போது 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கான விருதுகள் வழங்கப்பட்டன.
- ❖ 12 ஷில்ப் குரு விருதுகள் மற்றும் 36 தேசிய கைவினை விருதுகள் உட்பட மொத்தம் 48 விருதுகள் வழங்கப்பட்டன.

- உலோக வேலைப்பாடு, மர வேலைப்பாடு, ஜவுளி, ஓவியம், சுடுமண் பாண்டம், தோல் பொம்மலாட்டம், கம்பளங்கள் மற்றும் கரும்பு மற்றும் மூங்கில் வேலைப்பாடுகள் போன்ற பல்வேறு கைவினைப் பிரிவுகளில் விருதுகள் வழங்கப்பட்டன.
- விருது பெற்றவர்களில் 20 பெண் கைவினைஞர்களும் அடங்குவர்.
- ஷில்ப் குரு விருது பெற்றவர்களில் அஜித் குமார் தாஸ், சுதிர் குமார் மகாராணா, D. சிவம்மா, கமலேஷ் சர்மா, சுபாஷ் அரோரா மற்றும் ஷாஹீன் அஞ்சும் ஆகியோர் அடங்குவர்.




# விளையாட்டுச் செய்திகள்

## FEI ஆசிய சாம்பியன்ஷிப் போட்டி 2025


| COUNTRY | GOLD | SILVER | BRONZE | TOTAL |
|---|---|---|---|---|
| Singapore | 3 Para Dressage Team, Para Dressage Individual, Para Dressage Freestyle | 2 Para Dressage Individual, Para Dressage Freestyle | - | 5 |
| Thailand | 3 Dressage Team, Endurance Team, Eventing Team | - | 4 Dressage Individual, Dressage Freestyle, Endurance Individual, Eventing Individual | 7 |
| China | 2 Dressage Individual, Dressage Freestyle | - | - | 2 |
| India | 1 Eventing Individual | 4 Dressage Team, Dressage Individual, Dressage Freestyle, Eventing Team | - | 5 |
| Japan | 1 Jumping Team | - | - | 1 |
| United Arab Emirates | 1 Endurance Individual | - | - | 1 |
| Palestine | 1 Jumping Individual | - | - | 1 |
| Hong Kong | - | 2 Para Dressage Team, Eventing Individual | 5 Dressage Team, Para Dressage Individual, Para Dressage Freestyle, Eventing Team, Jumping Team | 7 |
| Kuwait | - | 2 Jumping Team, Jumping Individual | - | 2 |
| Bahrain | - | 1 Endurance Individual | - | 1 |
| Chinese Taipei | - | - | 1 Jumping Individual | 1 |

- 2025 ஆம் ஆண்டு FEI (சர்வதேச குதிரையேற்றம் சார்ந்த விளையாட்டுக் கூட்டமைப்பு) ஆசிய குதிரையேற்ற சாம்பியன்ஷிப் போட்டியானது தாய்லாந்தின் பட்டாயாவில் நடைபெற்றது.

- இந்தியா ஒரு தங்கம் மற்றும் நான்கு வெள்ளி உட்பட மொத்தம் ஐந்து பதக்கங்களை வென்றது.
- ஆஷிஷ் லிமாயே இந்தியாவின் முதல் ஈவென்டிங் தங்கத்தை வென்றார் என்ற நிலையில் மேலும் ஸ்ருதி வோரா டிரஸ்ஸேஜ் போட்டிகளில் மூன்று வெள்ளிப் பதக்கங்களைப் பெற்றார்.
- தாய்லாந்து ஏழு பதக்கங்களுடன் பதக்கப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.

# முக்கிய தினங்கள்

## சர்வதேச மலை தினம் 2025 - டிசம்பர் 11





- பனிப்பாறைகள் மற்றும் நீர், உணவு மற்றும் வாழ்வாதாரங்களில் அவற்றின் பங்கு பற்றிய விழிப்புணர்வை பரப்புவதே இந்த நாளின் நோக்கமாகும்.
- ஐக்கிய நாடுகள் சபையானது 2025 ஆம் ஆண்டினை சர்வதேச பனிப்பாறைகள் பாதுகாப்பு ஆண்டாக அறிவித்தது.
- இத்தினத்திற்கான கருத்துரு, "Glaciers matter for water, food and livelihoods in mountains and beyond" என்பதாகும்.
- பனிப்பாறைகள் புவியின் நன்னீரில் சுமார் 70% சேமித்து 2 பில்லியனுக்கும் அதிகமான மக்களுக்கு ஆதரவளிக்கின்றன.

## யுனிசெஃப் உருவாக்க தினம் 2025 - டிசம்பர் 11

- குழந்தைகள் உரிமைகள், சுகாதாரம், கல்வி மற்றும் பாதுகாப்பு பற்றிய விழிப்பு உணர்வை பரப்புவதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஐக்கிய நாடுகள் சபையானது, 1946 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபை குழந்தைகள் நிதியத்தை (யுனிசெஃப்) நிறுவியது.
- இரண்டாம் உலகப் போரால் பாதிக்கப்பட்ட குழந்தைகளை ஆதரிப்பதற்காக வேண்டி யுனிசெஃப் உருவாக்கப்பட்டது.
- 1953 ஆம் ஆண்டில், யுனிசெஃப் ஒரு நிரந்தர நிறுவனமாக மாறியது.
- ஒவ்வொரு குழந்தையும் உயிர் வாழ்வதையும், கற்றுக் கொள்வதையும், பாதுகாப்பாக

இருப்பதையும் உறுதி செய்வதற்காக யுனிசெஃப் தற்போது 190க்கும் மேற்பட்ட நாடுகளில் செயல்படுகிறது.

❖ 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "My day, My rights" என்பதாகும்.




# இதரச் செய்திகள்

## கற்றல் நகரங்களின் உலகளாவிய வலையமைப்பு 2025

| Region | Number of New Cities |
|---|---|
| **Africa** | 13 |
| **Arab States** | 13 |
| **Asia and the Pacific** | 21 |
| **Europe and North America** | 15 |
| **Latin America and the Caribbean** | 10 |
| **Total New Cities** | **72** |

❖ யுனெஸ்கோ 46 நாடுகளிலிருந்து 72 புதிய நகரங்களை உலகளாவிய கற்றல்

நகரங்களின் வலையமைப்பில் (GNLC) சேர்த்தது.

- இந்த விரிவாக்கத்தின் மூலம், இந்த வலையமைப்பில் தற்போது 91 நாடுகளில் 425 நகரங்கள் உள்ளன.
- உள்ளூர் மட்டத்தில் அனைத்து வயதினருக்கும் வாழ்நாள் முழுவதும் கற்றலை ஊக்குவிப்பதே இந்த வலையமைப்பின் குறிக்கோள் ஆகும்.
- கெய்ரோ, ரியாத், அங்காரா, ஹனோய், லிஸ்பன் மற்றும் பியூனஸ் அரிஸ் உட்பட 11 தலைநகரங்கள் இதில் இணைந்தன.
- அமெரிக்கா, மங்கோலியா, சிலி மற்றும் துர்க்மெனிஸ்தான் போன்ற 12 நாடுகள் முதல் முறையாக இந்த வலையமைப்பில் இணைந்தன.
- கற்றல் நகரங்கள் முன்னெடுப்பு ஆனது பள்ளிகள், பணியிடங்கள், நூலகங்கள், அருங்காட்சியகங்கள் மற்றும் வீடுகள் போன்ற அன்றாட இடங்களில் கல்வியை ஆதரிக்கிறது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★